வெளியீட்டு எண் : 3
செப்டம்பர் 30ந் தேதி 2005ஆம் ஆண்டு

# அரசுசாரா நிறுவன தகவல் இதழ்

பி.பொ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
6 Chanda Sahib street, Pondicherry, 605 001 India
Telephone: +91 413 520 0606 Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான தொண்டு நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செ–யும் பொருட்டு (ADER-ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்ற ஒரு பிரஞ்சு தொண்டு நிறுவனமும் மற்றும் FDF-(LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரன்ச் தர்ம ஸ்தாபனம்) என்ற ஒரு பிரன்ச் தொண்டு நிறுவனமும் இணைந்து துவக்கிய அரசுசாரா நிறுவன தகவல் அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்திவருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செ–து தகவல் மடலாக மாதம் இரு முறை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரன்ச் மொழிகளில் வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்


- தவவல் அலுவலகத்தின் தற்போதைய நிலவரம்
- இரு வார செ–திகளின் தொகுப்பு
  - பேரழிவு மேலாண்ன்மை
  - சுற்றுச்சூழல்
  - மீனவ செ–தி
  - ஊடகம்
  - மறுகட்டுமானம்
- புதிய ஆன் லைன் வளங்கள்
- புதமிழ் நாடு அரசு : நிரந்தர வீடு மறுகட்டுமான திட்டத்தின் நிலை
- நிகழ்வுகளின் பட்டியல்
- இணைப்பு : அரசுசாரா நிறுவனங்கள் புதுவை அரசை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


## தவவல் அலுவலகத்தின் தற்போதைய நிலவரம்

பிரன்ச் தர்ம ஸ்தாபனத்தின் மதிப்பீட்டுக் குழுவினர் அக்டோபர் மாதம் 15ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை தென்னிந்தியாவில் சுற்றுப்பயணம் செ–ய உள்ளனர். அவர்கள் வருகைக்கு புதுவை பி.பெ.வெ. அரசு சாரா தகவல் அலுவலகம் ஏற்பாடு செ–வதுடன், உள்ளூர் கூட்டாளிகளுடன் இணைந்து கூட்டம் நடத்த ஏற்பாடு செ–ய உள்ளது, அந்த குழு பிரன்ச் தர்ம ஸ்தாபனதின் நிதி உதவி பெறும் திட்டங்கள் மற்றும் அவை நடைபெறும் இடத்தை பார்வையிடுவது மற்றும் இது சம்மந்தமான மேலும் சில செயல்களிலும் ஈடுபட உள்ளனர்.

## இரு வார செ திகளின் தொகுப்பு

சுனாமிக்கு 9 மாதத்திற்கு பிறகும் தென்னிந்தியாவில் சுனாமி முக்கிய செ–திகளில் இடம் பெற்று வருகிறது. ஆயினும் அரசு, தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் பேரழிவு முன் ஏற்பாடு, மேலாண்மை மற்றும் நிவாரணத்தில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தி வருகின்றன. அலையாத்தி காடுகளான இயற்கை அரண், உள்ளூர் அளவிலான சுனாமி எச்சரிக்கை போன்ற திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டும், செயல்பட்டும் வருகிறது. இதனிடையே நிரந்தர வீடு மறுகட்டுமான செயல்திட்டம் உச்சக்கட்டத்தில் உள்ளது.

## பேரிடர் மேலாண்மை

*பேரழிவு மேலாண்மை கொள்கை இந்த ஆண்டு இறுதியில் தயாராகலாம்.*

பேரழிவு மேலாண்மை மற்றும் நிவாரண கொள்கை பாராளுமன்றத்தில் மழைகால கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்திய பிறகு இந்த ஆண்டு இறுதியில் வெளிவர இருக்கின்றது என்று மத்திய அரசு அறிவிப்பு.

மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர், கூட்டத்தில் ''பேரழிவு மேலாண்மை : ஓர் பாதுகாப்பான இந்தியாவிற்கு'' என்ற தலைப்பில் பேசினார். அப்பொழுது அவர் மேலும் கூறுகையில், பேரழிவில் மீட்பு மற்றும் புணரமைப்பை மையப்படுத்துவதற்கு பதிலாக அதை வளர்ச்சிக்கான சந்தர்பமாக மாற்ற, உத்தேச பேரழிவு மேலாண்டை கொள்கை புதிய வழிவகை கொண்டிருக்க வேண்டும் என்றார்.

ஒவ்வொரு ஆண்டும் மீட்பு மற்றும் புணரமைப்பு என்ற வகையில் அரசுக்கு 2 சதவீகித(GDP) மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏற்படுகிறது. எனவே பேரழிவு மேலாண்மை கொள்கையை எதிர்காலத்தில் எவ்வாறு பேரழிவை தடுத்து, முன்னேற்ற பாதையில் செல்லும் வகையில் சிறப்பாக கையாள வழிவகை செ—யப்படும்.

P.G. தார் சக்கரவர்த்தி தேசிய பேரழிவு மேலாண்மை பள்ளியின் செயல் இயக்குனர் கூறுகையில், 66 சதவீகித இந்திய நில பகுதி பேரழிவு ஏற்படும் பகுதியில் உள்ளது. மற்றும் 10,000 கி.மீ. கடலோர பகுதி புயல் மற்றும் பல ஆபத்துகளால் பாதிக்கப்படக்கூடிய பகுதியாகும்.
ஆதாரம் :http://www.hindu.com/2005/09/15/stories/2005091501730900.htm

*எந்த பேரழிவையும் எதிர்கொள்வோம் அதிகாரிகள் உறுதி.*

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.M. வீரசண்முகமணி, இயற்கை சீற்றத்தை எதிர்காலத்தில் எதிர்கொள்வது குறித்து கிராம அளவிலான கூட்டத்தை கூட்டினார். ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டத்திற்கு முன் நடந்த பேரழிவை எதிர்கொள்வது குறித்து நடந்த விவாதத்தில் மாவட்டட ஆட்சியர் கூறும்பொழுது, ''பேரழிவிற்கு மக்களுக்கு உதவிகளை வழங்குவதைவிட வருமுன் காப்பதே நல்லது மேலும் மக்கள் பேரழிவு ஏற்படுவதற்கு முன்னதாகவே பாதுகாக்கப்படவேண்டும். அதிகாரிகள் வட்டம், தாலுக்கா மற்றும் கிராமவாரியாக கூட்டங்கள் நடத்தி பேரழிவின் மேலாண்மை பற்றி விவாதிக்க வேண்டும்'' என்றார்.

மேலும் அவர் கூறுகையில், அவசர கால வழிகாட்டி உருவாக்கப்பட்டுள்ளது. அதில் பேரழிவு ஏற்படும்பொழுது துறைவாரியாக அதிகாரிகள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையும் உதாரணமாக பொதுப்பணி, கல்வி, விவசாயம், சுகாதாரம், குடிநீர், போக்குவரத்து மற்றும் மின்துறை போன்ற துறைகள் பேரழிவு ஏற்படும்போது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விளக்கங்கள் தனித்தனியாக கொடுக்கப்பட்டுள்ளன. இதன் முழு விவரபரத்தை பின்வரும் இணையதளத்தில் பெறலாம். http://www.thanjavur.tn.nic.in/
ஆதாரம் : http://www.hindu.com/2005/09/21/stories/2005092102510300.htm

## சுற்றுப்புறச்சூழல்

### **புதுவை**

*புதுவை அரசு கடல் அரிப்பை தடுப்பதில் முழுகவனம்.*

தன்னார்வல அமைப்புகள் புதுவை அரசின் வன மற்றும் வனவிளங்கு துறையுடன் இணைந்து கடலோரப் பகுதியில் மரக்கன்று நடுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் மூலம் மண் அரிப்பை தடுப்பது மற்றும் பேரலையால் வரும் பாதிப்பை குறைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு சுனாமியால் மிகவும் பாதித்த புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இயற்கை அரண் இல்லாதது ஒரு முக்கிய காரணம் ஆகும். இதை வலியுறுத்தும் தொண்டு நிறுவனங்களின் தேவையை கண்டறிந்து, இத்திட்டத்திற்கு அரசியல் அங்கீகாரம் மற்றும் நிதி உதவி வழங்கப்படுகிறது.

ஆதாரம் : http://www.hindu.com/2005/09/17/stories/2005091703980300.htm

## தமிழ்நாடு

*தமிழ் நாடு கடலோரப்பகுதியில் இயற்கை பதுகாப்பு அரண் அமைப்பு.*

தமிழ் நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களில் இயற்கை பாதுகாப்பரண் என்று சொல்லக்கூடிய (Mangrove) அலையாத்தி காடுகள் வளர்ப்பதற்காக உலக வங்கி ரூ 10கோடியை வழங்கியுள்ளது. கடலோரத்தை ஒட்டிய மணல் பகுதியை 25 முதல் 50 வரிசை வரை சவுக்கை கன்று நட்டு போரலையின் வேக்கத்தை குறைக்க உள்ளனர்.

முன்னாள் முதன்மை வன பாதுகாப்பாளரும் மற்றும் சமூக காடுகள் ஆரா–ச்சி மற்றும் வளர்ச்சியின் தலைவர் திரு. ஜான் ஜோசப், கூறுகையில். இந்த திட்த்தின் மூலம் 2000 ஹெக்டர் பரப்பளவில் சவுக்கு மற்றும் 7000 ஹெக்டர் பரப்பளவில் (Mangrove) அலையாத்தி காடுகள் உருவாக்கப்படும். இந்த திட்டம் ஜீன் 2006 ஆம் ஆண்டு முடிவடையும். இது கடந்த ஜீலையில் தமிழ்நாடு வனத்துறையும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களும் சேர்ந்து தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுவருகின்றன என்றார்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/09/14/stories/2005091407550400.htm.

### மீனவ செ–தி

## தமிழ்நாடு

மோசமான மீன்பிடி படகுகள் கட்டப்பட்டும், வழங்கப்பட்டும் வருகிறது. இச்செ–தி பல முறை உள்ளுர் மற்றும் அகில உலக இதழ்களிலும் வெளிவந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், படகுகள் உள்ளுரில் மிக அதிகமாக தேவைப்படுவதால் கை தேர்ந்த கப்பல் கட்டுமான பணியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பல கப்பல்களை தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகிறார்கள். இதனிடையில் அனுபவம் இல்லாத பல புதிய நிறுவனங்கள் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபடுகின்றன. இதன் விளைவாக முறையற்ற கப்பல் கட்டுவது, மீனவர்களின் தேவைக்கு ஏற்றவாறு இல்லாதது மற்றும் கடல்சார்ந்த சுற்றுச்சூழலுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுத்துவது போன்ற இக்கட்டான சூழ்நிலைகள் உருவாகின்றதுன.

ஒன்று சேர்ந்த இந்திய என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் சுனாமிக்கு முன் ஒரு மாதத்தில் 3 கப்பல்களை கட்டியவர்கள் சுனாமிக்கு பின் அதே ஒரு மாதத்தில் 80 கப்பல்களை தயார் செ–து உள்ளனர். இது கப்பலின் தரத்தை வெகுவாக பாதிக்கும்.
ஆதாரம் : http://www.indiatogether.org/2005/sep/ddz-leakboat.htm, http://www.alertnet.org/thenews/newsdesk/SYD276343.htm

### ஊடகம்

*செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸின் தலைப்புச் செ–தி : சுனாமி நிதியில் முறைகேடா? ரூ 15 கோடி மதிப்புள்ள காசோலை மோசடி*

தமிழ்நாட்டில் நன்கொடையாக பெற்ற ரூ 15 கோடி மதிப்புள்ள சுனாமி நிவாரண நிதி காசோலை பணமாகவில்லை. இதில் பிரபல நடிகரின் காசோலையும் அடக்கம். இந்த குற்றச்சாட்டு அடுத்த இதழிலேயே திருப்பப்பெறப்பட்டது. இதன் மூலம் சுனாமி புணரமைப்பு நடவடிக்கைகள் இன்னும் தலைப்புச் செ–தியில் இடம்பெறும் நிகழ்வாகவே உள்ளது என்பதை உணரலாம்

ஆதாரம் : நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 18–09–2005.
குறிப்பை கவனிக்க : ரூ 15 கோடி மதிப்புள்ள காசோலை மோசடியில்லை.
ஆதாரம் : http://www.hindu.com/2005/09/21/stories/2005092116780800.htm

# மறுகட்டுமானம்

## அந்தமான் மற்றும் நிக்கோபார்

*சுனாமியால் பாதித்த தீவுகளில் மாதிரி மரம், சிமெண்ட் வீடுகள் கட்ட அனுமதிப்பதில் மோதல்*

மறுகட்டுமானம் நடைபெறும் பழங்குடியினர் வாழும் மாதிரி வீடுகள் விவாதம் ஆனதால் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் புணரமைப்பு பணிக்காக மத்திய அரசு ஒதுக்கிய ரூ 600 கோடி பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. மத்திய அரசின் கட்டுமான முகமைகள் இரும்பு மற்றும் கலவையைக் கொண்டு தீவுகளில் வீடுகட்ட வலியுறுத்துகிறது.

ஆனால் திட்ட குழு மற்றும் உள்துறை அமைச்சகத்தின் அனுமதிபெற்ற மரத்தால் ஆன பாரம்பரிய வீடுகளையே கட்ட வேண்டும் என தொண்டு நிறுவன குழுக்கள் வற்புத்துகின்றன. அரசு சாரா நிறுவனங்கள், பழங்குடியினர் வாழும் மர வீடுகளையே கட்டவேண்டும் அதுவே இந்த சுற்றுச்சுழலுக்கு ஏற்றது என்று வலியுறுத்துகின்றன.

சுனாமியால் தீவுகளில் உள்ள மரக்கிடங்கு பாதிக்கப்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்குத் தேவையான மரங்கள் இங்கு இல்லை, மரங்களை வெளியில் இருந்து இறக்குமதி செ–யவேண்டும். மேலும் அதிகமான திறமைவா–ந்த வேலையாட்கள் தேவை. அவையும் போதிய அளவில் இங்கு இல்லை என்று உயர்அதிகாரிகள் கூறுகின்றனர்.
ஆதாரம் : நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 18–09–2005.
ஆதாரம் : *http://www.newindpress.com/NewsItems.asp?ID=IEH20050917123032&Page=H&Title=Top+Stories*

## புதுவை

சுனாமி புணரமைப்பு, டெல்லியைச் சார்ந்த ஓர் அரசு சாரா நிறுவனமான (Development Alternativies) மாற்று வளர்ச்சி நிறுவனத்துடன் புதுவை அரசு மூன்று ஒப்பந்தங்கள் செ–துள்ளது. அதன்படி 1175 வீடுகள் காரைக்காலில் கட்டப்படும். அந்த உடன்பாட்டின்படி வீடுகட்டுவது மட்டுமின்றி சமுதாய உட்கட்டமைப்புகளான ஆரம்பப்பள்ளி, சமுதாயகூடம், சுகாதார மையம், குழந்தைகள் பாதுகாப்பகம், விளையாட்டு மைதானம், சாலை மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், கழிவுநீர் வெளியேறும் வசதி, மழை நீர் சேகரிப்பு வசதி மற்றும் தெரு விளக்கு போன்ற வசதிகள் செ–து தரப்படும்
ஆதாரம் : http://www.hindu.com/NewsItems.asp?Id=IET2005091120337&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

## தமிழ்நாடு

சுவாமி ஷெக்ஷான் பராயோகா, வளர்ச்சி மற்றும் மக்கள் அறிவியல் பள்ளியின் கன்னிமட மையம் இவை இரண்டும் தற்காலிக குடியிருப்பவர்களின் வாழ்க்கை நிலையை ஆ–வு செ–துள்ளன. இந்த ஆ–வு நாகப்பட்டனத்தைச் சேர்ந்த சீர்காழி மற்றும் தரங்கம்பாடி தாலுக்காக்களில் தற்காலிக குடியிருப்புகளில் வாழும் மக்களிடம் நடத்தப்பட்டது. அந்த ஆ–வு கட்டுரையில் அவர்கள் வாழ்வு மேம்படுவதற்க்குத் தேவையான திட்ங்கள் இருக்கிறது. இதன் முழு விபரம் பின் வரும் இணையதளத்தில் காணலாம்.
http://www.disasterwatch.net/resources%20links/Life_in_Temporary_shelters.pdf
http://www.disasterwatch.net/resources.htm

*சென்னை : 900 குடும்பத்தினர் இன்னும் வீடு இன்றி தவிக்கின்றனர்.*

தாழ்வான பகுதியில் வசிக்கும் மீனவ சமுதாயம் அல்லாதவர்கள் சீனுவாசபுரத்தைச் சேர்ந்த 900 குடும்பத்தினர்கள் தற்காலிக குடியிருப்புக்காக போராடி வருகின்றனர். இந்த குடும்பங்களைச் சா்ந்தவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை கடந்த புதன்கிழமை அன்று நடத்தி, மாநில அரசு தற்காலிக வீடு வழங்கவேண்டும் என்று வற்புறுத்தினர்.

தற்போது, பல குடும்பத்தினர் தங்கள் உறவினர்களின் வீட்டில் வசிக்கின்றனர். மற்றும் சிலர் நகரத்தின் பல இடங்களில் சாலை ஓரத்தில் வசிக்கின்றனர். பெரும்பாலான மக்கள் பெருளாதார நெருக்கடி காரணமாக தாங்கள் தங்கியிருந்த வாடகை வீட்டை காலி செ–து அவதிப்படுகின்றனர். பல குடும்பத்தினர் கணக்கெடுக்கும் பொழுது அந்த இடத்தில் இல்லை எனவே அவர்கள் வீடுகளை இழந்தவர்களின் பட்டியலில் இருந்து விடுபட்டும் உள்ளதால் தற்காலிக குடியிருப்பும் பெறவில்லை. பாதிக்கப்பட்டவர் ஒருவர் கூறுகையில், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடு வழங்குவதற்கு முன் குறைந்த பட்சம் தற்காலிக குடியிருப்பாவது பெற்றுள்ளார்களா என்பதை உறுதி செ–யவேண்டும். இதில் பெரியவர்களைவிட சிறுவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் தங்கள் கல்வியை தொடர இயலாத நிலையில் உள்ளனர் என்றார்.

ஆதாரம் : http://newindpress.com/NewsItems.asp?ID=IE920050915140615&Page=9&Title=Chennai&Topic=0

திரு. நீரஜ் மிட்டல், தமிழ்நாடு நிவரணம் மற்றும் புணரமைப்பு இணை ஆணையர் கூறுகையில், அரசு 60 சதவிகித நிலம் நிரந்தர வீடு கட்டுவதற்காக கையகப்படுத்தப்பட்டு விட்டது. 842.02 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் 499.7 ஏக்கர் கையகப்படுத்தப்பட இருக்கிறது என்றார். அரசு நிலம் கையகப் படுத்துவதற்காக மட்டும் இதுவரை 23.2 கோடி ரூபா– செலவு செ–துள்ளது. முதற்கட்டமாக கட்டுமான பணி மார்ச் மாதம் 2006 ஆம் ஆண்டு நிறைவடையும். செப்டம்பர் மாதம் 2006 ஆம் ஆண்டு 2ம் கட்ட கட்டுமான பணியை முடிக்க இலக்கு நிர்ணைக்கப்பட்டுள்ளது என்றார்.
ஆதாரம் : http://www.thehindu.com/2005/09/23/stories/2005092316600300.htm

மற்றும் சில மறுகட்டுமான தகவல்களை பின்வரும் இணையதலத்தில் காணலாம்
:http://www.chennaionline.com/colnews/newsitem.asp?NEWSID=%7BFD69FB08-C4C1-4D59-8B3A-212A3096EC2F%7D
http://www.hindu.com/2005/09/25/stories/2005092504370500.htm

## புதிய ஆன் லைன் வளங்கள்

- தமிழ்நாடு அரசு இணையதளத்தில் பல புதிய ஆவணங்கள் இடம்பெற்றிருக்கின்றன :
  - 31–01–2005 வரையிலான தமிழ்நாடு அரசின் வீடு கட்டுமான நடிவடிக்கையின் சுருக்கம் இடம்பெற்றிருக்கிறது.
    http://www.tn.gov.in/tsunami/tsunami-relief.htm.
  - தமிழ்நாட்டின் கடிலோர ஒழுங்கு முறை பகுதி சுனாமியால் பாதிக்கப்பட்வர்களுக்கு செ–யவேண்டிய மறுகட்டுமானம் பற்றி சட்டப்படியான வழிமுறைகளை காட்டியுள்ளது.
    http://www.tn.gov.in/tsunami/rr-guide.pdf

- TNTRC - தமிழ்நாடு சுனாமி வள மையம் தனது இணையதளத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை புணரமைப்பு பற்றிய மாதிரி திட்டத்தை வெளியிட்டுள்ளது.
  http://www.tntrc.org/downloads/Nagapattinam/Nagapattinam_NCRC.doc

- சுனாமி – கடலோர சமுதாயத்தினர் மறுகுடியேற்றம் – வா–ப்புகள் மற்றும் கருத்துக்கள் – தமிழ்நாடு, என்ற தலைப்பில் (Care India) கேர் இந்தியா ஆவணம் ஒன்றை தயார் செ–துள்ளது. இது (TRInet) டிரைநெட்–ன் இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. http://www.trinet.in/modules/mydownloads/

# தமிழ்நாடு அரசு : நிரந்தர வீடு மறுகட்டுமான திட்டத்தின் நிலை

**16–09–2005 ஆம் ஆண்டின் படி அரசுசாரா நிறுவனங்களின் மூலமாக உத்தேச கட்டுமான வீடுகளின் எண்ணிக்கை, வேலை துவங்கப்பட்டது மற்றும் மீதம் உள்ளது (உடன்படிக்கை கையெழுத்தான எல்லா இடங்களிலும்)**

| வரிசை எண் | மாவட்டங்களின் பெயர் | அரசு சாரா நிறுவனங்கள் / தொண்டு நிறுவனங்கள் மூலம் கட்டப்படும் வீட்டுகளின் எண்ணிக்கை | வேலை துவங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அடிப்படை வேலை துவங்கப் பட்டது | அடிக்கல் நாட்டப்பட்டது | கூரை வேயப்பட்டது | முழுமை பெற்றது | மொத்தம் | நிலவளர்ச்சி மற்றும் தூ–மை | எஞ்சிய வேலை |
| 1 | Chennai | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 2 | Cuddalore | 2322 | 904 | --- | 280 | 207 | 1391 | --- | 931 |
| 3 | Kanchipuram | 3702 | 236 | 155 | 40 | --- | 431 | --- | 3271 |
| 4 | Kanniyakumari | 2554 | 913 | 700 | 175 | 25 | 1813 | --- | 741 |
| 5 | Nagapattinam | 17461 | 2133 | 318 | 195 | 50 | 2696 | 7319 | 7446 |
| 6 | Pudukottai | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 7 | Ramanathapuram | 6 | --- | --- | --- | --- | --- | --- | 6 |
| 8 | Thanjavur | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 9 | Tuticorin | 716 | 229 | 89 | 4 | --- | 322 | --- | 394 |
| 10 | Tirunelveli | 2034 | 740 | --- | --- | --- | 740 | --- | 1294 |
| 11 | Tiruvallur | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 12 | Tiruvarur | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 13 | Villupuram | 1620 | 100 | 192 | 14 | --- | 306 | --- | 1314 |
| **TOTAL** | | **30415** | **5255** | **1454** | **708** | **282** | **7699** | **7319** | **15397** |

Source: http://www.tn.gov.in/tsunami/housing.pdf

## நிகழ்வுகளின் பட்டியல்

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி/ காலம் | இடம் |
|---|---|---|---|
| Training session: *Environmental Health in Emergencies* | **RedR India** info@redrindia.org | 17-10-05 to 23-10-05 | Pune, Maharashtra |
| Workshop: *Understanding the Sphere Project* | **RedR India** info@redrindia.org | 16-11-05 to 19-11-05 | Trivandrum, Kerala. |
| International Conference on Disaster Management and Trauma Counselling | **Sudha Bhogle** at bangaloreuniversity@counsellor.com | 21-12-05 to 22-12-05 | Bangalore, India |

## தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :

புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

பிரான்சு

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | **FdF :** Fondation de France<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |

## இணைப்பு: அரசுசாரா நிறுவனங்கள் புதுவை அரசை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

| | |
|---|---|
| **புதுவை சுனாமி மற்றும் புணரமைப்பு அலுவலகம்** | |
| Mr.B.V.Selvaraj I.A.S<br>(Development- cum- Relief & Rehabilitation Commissioner)<br>Pondicherry Chief Secretariat<br>Goubert Avenue,<br>Pondicherry - 605001.<br>Tel. 91 0413-233 4144<br>Email: bvsraj@nic.in | **Contact person:**<br>Mr. S.Ganasen (Revenue Officer),<br>Mr. M.Kandaswamy (Deputy Tahsildar),<br>Tel. 91 0413-223 3325.<br>Email: bvsraj@nic.in |
| **புதுவை ஆட்சியர் அலுவலகம்** | **காரைக்கால் ஆட்சியர் அலுவலகம்** |
| Mr. G.Ragesh Chendra (Collector),<br>Mr. Rajamanikam (Rev. Off.)-Contact Person,<br>Dept. of Revenue & Disaster Management,<br>Saram, Pondicherry-605013.<br>Tel. 0413-224 8691,224 9060<br>Fax No: 91 0413-2248759<br>Email: jsrev@pondy.pon.nic.in | Mr.Sundara Vadivelu (District Collector),<br>No: 609/602,Collector House,<br>Karaikal,<br>Pondicherry State.<br>Tel. 91 04368-222 941<br>Email:collr.kkl@nic.in<br><br>Mr. Md. Manoor (DeputyCollector)<br>Tel. 91 04368-222467 |
| **அரசுசாரா நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகள் மூலம் புதுவை அரசை தொடர்புகொள்ள வேண்டிய முகவரிகளின் அட்டவணை** | |
| விவசாயம், நில புணரமைப்பு மற்றும் அவை சம்மந்தமான நடவடிக்கைகள் | Dr. Sathyaseelan (Additional Director),<br>Agriculture Department,<br>New lighthouse St.,<br>Vamba keerapalayam,<br>Pondicherry.<br>Tel. 91 0413-2336977<br>Email: agri@pondy.nic.in |
| **கலை, கைவினை பயிற்சி மற்றும் வளர்ச்சி** | Mr. Mathew Samuel (Director),<br>Rural Development Department,<br>Pondicherry Housing Board Building Complex,<br>2nd Floor, Anna Nager, Nelithope,<br>Pondichery - 605005.<br>Tel. 91 0413-220 3601<br>Email:drdapdy0405@sify.com |
| **மீன் பிடி படகு, வலைகள் வழங்குதல் மற்றும் அவை சம்மந்தமான நடவடிக்கைகள்** | Mr.M.K. Surendiran (Director),<br>Mrs.Ramalakshmi (Joint Director),<br>Mrs. Mary Chinna Rani (Deputy Director),<br>Fisheries Department,<br>Botanical Garden Premises, Pondicherry.<br>Tel. 91 0413-222 8761 |

| | |
|---|---|
| **சுற்றுச்சூழல், கடலோர இயற்கை அரண் மற்றும் மரம் நடுதல் சம்மந்தமான நடவடிக்கைகள்** | Mr.P.Devaraj, I.F.S (Deputy Convenor of Forest),<br>B.R. Balagandhi, (Dey. Director-Social Forestry),<br>Deparment of Forest,<br>Botanical Garden Premises,<br>Pondicherry.<br>Tel. 91 0413-2228088,2228304<br>Fax: 91 0413-2349304<br>Email:dcf_pondicherry@yahoo.co.in |
| **சமூக நடவடிக்கைகள்** | Mrs. Devi Mathews (Director),<br>Women and Child Development Department,<br>No: 50,Chittan Kudi Main Road,<br>Sithankudisai, Saram,<br>Pondicherry-605013.<br>Tel. 91 0413-224 4964 |
| **உப்பு நீரை குடிநீராக்குவது மற்றும் அது சம்மந்தமான நடவடிக்கைகள்** | Mr. G.Vijayan (Asst. Engineer),<br>Public Works Department, Water subdivision<br>Subiya Salai,<br>Pondicherry - 605001.<br>Tel. 91 0413-233 6520 |
| **திட்ட செயலாக்க முகமை அலுவலகம்** | |
| Mr.G.Thevaneethi Dhas (Project Director),<br>Mr.P.Kandasamy (Joint Project Director)<br>Project Implementation Agency,<br>5th Floor, A-Block, Kamaraj Centerary Educational Complex,<br>Anna Nager, Pondicherry.<br>Tel. 91 0413-2205566<br>Email: pia@pon.nic.in | |

**மொழி பெயர்ப்பு :**
திரு. ம. முருகானந்தம்
மின் அஞ்சல் : infoinde@ader-france.org

**தட்டச்சு :**
திரு. ச. சோழன்
மைக்ரோ டிடிபி ஆப்செட் பிரிண்டிங்
தொலைபேசி : 91–413–5210966
மின்அஞ்சல் : sozhan6@sify.com

**இலக்கணம் மற்றும் பிழைதிருத்த மேற்பார்வை :**
திரு. மு. கணேஷ